# சீர்காழி நகராட்சி



2021 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24.06.2021 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி – தற்போது நாடுமுழுவதும் கொரேனா Covid–19 இரண்டாவது அலை வேகமாக பரவி வருவதால் இந்நோயிலிருந்து பொதுமக்களை காக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் கொரோனா Covid–19 பணியின் தடுப்பு நடவடிக்கைக்கு PPE kit மற்றும் Biomedical Waste சேகரித்தல் செய்திட மஞ்சள்பை வாங்கி வழங்கிட செலவினங்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவீனம் ரூ . 56,500 / க்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(அ-கு) கொரோனா தடுப்பு பணிக்காக தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டதற்கான செலவீனத்தை மன்றம் பதிவு செய்யலாம்.<br>( ந.க.எண்: 1034 / 2020 / எச்1) | நகர்மன்ற தீர்மான எண்–6<br>நாள்.24.06.2021<br>அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-2 | சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் துப்புரவு பணி ஆணை நாள்.30.09.2020–ன்படி பணி பார்க்கப்பட்டு வருகிறது. 31.03.2021–வுடன் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. நடைபெறயுள்ள சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத சூழ்நிலையில் உள்ளதாலும் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் செயல்முறைகளின் 2020–2021 –ஆம் ஆண்டின் அதே விலை விகிதத்தில் செய்திட ஒப்பந்ததாரர் இசைவினை கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் சம்மதம் தெரிவித்துள்ளார். 01.04.2021 முதல் 31.05.2021 வரை இரண்டு மாத கால அவகாசத்திற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு தற்போது உள்ள பணி உத்திரவின்படி பணி நீட்டிப்பு செய்திடவும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.16,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2669/2020/எச்.1) | நகர்மன்ற தீர்மான எண்–6<br>நாள்.24.06.2021<br>அனுமதிக்கப்படுகிறது. |

பொருள் எண்-3

சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் துப்புரவு பணி ஆணை நாள்.30.09.2020–ன்படி 01.10.2020 முதல் பணி பார்க்கப்பட்டு வந்தது. 31.05.2021–வுடன் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. நடைபெற்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத சூழ்நிலையில் உள்ளதாலும் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் செயல்முறைகளின் படி 2020–2021 –ஆம் ஆண்டின் தினக்கூலி விகிதத்தில் பணி செய்திட **சுய உதவிகுழுக்களின்** மூலம் 01.06.2021 முதல் 31.07.2021 வரை இரண்டு மாத காலத்திற்கு கீழ்கண்டவாறு சுயஉதவிகுழுக்கள் மூலம் பணி செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு

1. வார்டு எண் 11,14,15,16,17, ஆகிய பகுதிகளுக்கு தூய்மைப்பணியாளர்கள் 21 எண்ணிக்கை ஸ்ரீஅம்மன் சுய உதவி குழு சீர்காழி
2. வார்டு எண் 1,2,3,4,5,9,10 ஆகிய பகுதிகளுக்கு தூய்மைப்பணியாளர்கள் 21 எண்ணிக்கை ஸ்ரீசக்தி சுய உதவி குழு சீர்காழி
3. வார்டு எண் 18,19,20,21, ஆகிய பகுதிகளுக்கு பற்றாக்குறை தூய்மைப்பணியாளர்கள் 8 எண்ணிக்கை மற்றும் தென்பாதி நுண் உரம் மையத்தின் பணியாளர்கள் 7 எண்ணிக்கை ஸ்ரீகருமாரியம்மன் சுய உதவி குழு சீர்காழி
4. வார்டு எண் 6,7,8,11,12,13,22,23,24 ஆகிய பகுதிகளுக்கு பற்றாக்குறை தூய்மைப்பணியாளர்கள் 7 எண்ணிக்கை மற்றும் தென்பாதி நுண் உரம் மையத்தின் பணியாளர்கள் 7 எண்ணிக்கை ஸ்ரீவிநாயகா சுய உதவி குழு சீர்காழி.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதி வழங்கலாம்,
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2669/2020/எச்.1)

நகர்மன்ற தீர்மான எண்–616, நாள்.24.06.2021 அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-4

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் ஈசானிய தெருவில் உள்ள கலவை உரத்திடலில் காணப்படும் குப்பைகளை அகற்றி ஒன்று சேர குவித்து தொடர்ந்து குப்பைகள் அகற்றி ஒன்று சேர குவித்து தொர்ந்து குப்பைகள் கொட்டுவதற்கு ஏதுவாக JCB இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் வாயிலாக பணிகள் மேற்கொள்ளவும் கலவை உரக்கிடங்கில் 12.11.2020 முதல் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகை ரூ.198155/ க்கு வரப்பெற்றுள்ளது. சூமற்படி செலவீன தொகையை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் மன்றத்தின் பார்வைக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2027/2020/எச்1)

நகர்மன்ற தீர்மான எண்–617, நாள்.24.06.2021 அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-5

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நகராட்சிகளில் உருவாகும் மொத்த குப்பைகளின் அளவை மதிப்பீடு செய்ய நகரில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி வாங்கப்படும் குப்பை கழிவுகளின் அளவை சிராய்வு செய்ய விலைப்புள்ளி கோரியதில் 24.06.2021 அன்று கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| S.No | Name Adress | Particulars | Price(Rs) | Total |
|---|---|---|---|---|
| 1 | Enviro Farmers LABS & Technologies | Segragation &Quantication of municipal Solid Waste (MSW) | 1x20000 | 20000 |
| | | Trars portation charges & Field Expenses for onsite sample | 1000 | 1000 |

நகர்மன்ற தீர்மான எண்–618, நாள்.24.06.2021 அனுமதிக்கப்படுகிறது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>Collection in</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td>18% Tax GST (SGST 9% + GST 9% )</td><td>3780</td><td>3780</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>Total</td><td>24780</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண் -1 இல் குறிப்பிடப்பட்டள்ள Enviro Farmers LABS & Technologies என்ற கோயம்புதுார் என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்பதற்கு அவசர அவசியம் கருதி உத்தேச செலவீனம் தொகை ரூ.24780/- க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டடப்படுகிறது.<br>
அலுவலலககுறிப்பு :<br>
1. மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசரம் அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் முன்அனுமதி வேண்டடப்படுகிறது.<br>
(ந.க.எண்:233/2021/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-6</td>
<td>தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் விற்பனை பிரிவிலிருந்து இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இருச்சக்கர வாகன காப்பகத்தின் கிழக்கு பகுதியில் ஆவின் பாலகம் அமைத்து தரமான ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் மக்கள் எளிதில் கலப்படம் இல்லாமல் பெற்றிட 10x10 அளவில் இட ஒதுக்கீடு செய்ய கோரி ந.க.எண்.160/வீ.பா/02 நாள்.02.03.2020 அன்று கடிதம் வரப்பெற்றதற்கிணங்க 10x10-க்கு இட ஒதுக்கீடு செய்யவும் அதற்கான கடைக்கு மாத வாடகையாக ரூ.1025/– ஆக நிர்ணயம் செய்து 12x1025=12300/–ஆக முன் வைப்புத் தொகையக பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 2306/2020/அ.1</td>
<td>நகர்மன்ற தீர்மான எண்–619, நாள்.24.06.2021 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-7</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளத ன்படி பொதுப்பணிதுறை விலை விகித்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு 30.04.2021 அனுமதித்துள்ள நாள் முடிவடையும் நிலையில். ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததால் 01.07.2021 முதல் 30.07.2021 வரை தற்போது உள்ள ஒப்பந்தப்புள்ளி படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.632.00 வீதம் நான்கு நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.75840/– மட்டும் மேலும் 1 மாதத்திற்கு காலநீட்டிப்பு செய்து இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி/பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்568/2020/இ1)</td>
<td>நகர்மன்ற தீர்மான எண்–620, நாள்.29.07.2021 அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

(ஒம்)முன்னிலை. திருமதி .P.தமிழ்ச்செல்வி.BA
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

/உண்மை நகல்/

இடம்–சீர்காழி
நாள்–24.06.2021

ஆணையர்,
சீர்காழி ந கராட்சி.